[2021] 6 எஸ் சி ஆர். 4

காவல்துறை ஆணையர்

எதிர்

ராஜ் குமார்

(உரிமையியல் மேல்முறையீடு எண். 4960/2021)

ஆகஸ்ட் 25,2021

[மாண்புமிகு நீதியரசர் திரு.கே. எம். ஜோசப்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு.எஸ். ரவீந்திர பட்]

பணிமுறை சட்டம் – ஆட்சேர்ப்பு – பொது வேலைவாய்ப்பு – டெல்லி காவல்துறை – காவலர் பதவி – டெல்லி காவல்துறையில் தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட, குற்றவியல் வழக்குகளில் (விசாரணையை எதிர்கொள்பவர் அல்லது விடுவிக்கப்பட்டவர்) தொடர்புடைய தேர்வர்களின் விவகாரங்களில் முடிவெடுப்பதற்கான நிலை ஆணை எண் 398/2010 கொள்கை – குற்றவியல் நடவடிக்கைகளை எதிர்கொண்டதால் எதிர்மேல்முறையீட்டாளரான தேர்வர்களின் விண்ணப்பங்களைத் தேர்வு ஆணையம் / தேர்வுக் குழு நிராகரித்தது – எதிர்மேல்முறையீட்டாளர்களின் மனுக்களை மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் அனுமதித்தது – நீதிப்பேராணை மனுக்கள் – எதிர்மேல்முறையீட்டாளர்களின் பணி நியமனத்திற்குப் பரிசீலிக்க வேண்டும் என்ற உயர் நீதிமன்றத்தின் உத்தரவு – தீர்முடிவு:

நியாயமற்றது – நடைமுறையிலுள்ள நிலை ஆணையைப் வாசிப்பதன் மூலம், சில குறிப்பிட்ட குற்றங்களைப் பொறுத்தவரை, ஒரு தேர்வர் விடுவிக்கப்பட்டார் அல்லது குற்றச்சாட்டிலிருந்து விடுபட்டார் என்பது மட்டுமே அவருக்குப் பணி வழங்கப்படுவதற்கான உரிமையை அளித்துவிடாது என்பது தெளிவாகிறது – பொதுப்பணி – மற்ற பணிகளைப் போலவே, தனது பணியில் யார் சேர வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் அரசு என்ற வேலை வழங்குபவருக்கு ஒரு குறிப்பிட்ட அளவிலான சுதந்திரம் அல்லது விருப்பத் தேர்வை வழங்குகிறது – தகுதி, அனுபவம், வயது, ஒரு வேட்பாளர் அனுமதிக்கப்படும் முயற்சிகளின் எண்ணிக்கை போன்ற அத்தியாவசிய அம்சங்களைச் சில விதிமுறைகள் நிர்வகிக்கின்றன – அந்த விதிமுறைகள் நியாயமானவை மற்றும் முறையானவை என்பதையும், அவை பாரபட்சமற்ற முறையில் சரியாகப் பயன்படுத்தப்படுவதையும் உறுதி செய்ய நீதித்துறை மறுஆய்வு அனுமதிக்கப்படுகிறது – இருப்பினும், தகுதி அல்லது பொருத்தம் என்பது முற்றிலும் வேறுபட்டது; முடிவெடுக்கும் செயல்முறை சட்டவிரோதமானதாகவோ, அநீதியானதாகவோ அல்லது நல்லெண்ணம் அற்றதாகவோ இல்லாதவரை, ஒரு பொதுத்துறை நிறுவனத்தின் தன்னாட்சி அல்லது விருப்பத்தேர்வு மிக உயர்ந்ததாக இருக்கும் – உயர் நீதிமன்றத்தின் அணுகுமுறையானது, சிறு குற்றங்கள் அல்லது தவறான நடத்தைகளை உள்ளடக்கிய செயல்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளத்தக்கவை என்பதைச் சுட்டிக்காட்டுவது போல்

தோன்றுகிறது – குற்றவாளியின் நடத்தையை மன்னிப்பதற்குக் காரணமாக அமையும் இத்தகைய பொதுப்படையான கருத்துக்கள், நீதித்துறைத் தீர்ப்புகளில் இடம்பெறக் கூடாது மற்றும் அவை தவிர்க்கப்பட வேண்டும் – ஒவ்வொரு வழக்கும் அந்தந்த பொதுத்துறை நிறுவனத்தால், அதன் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மூலம் நுணுக்கமாக ஆய்வு செய்யப்பட வேண்டும் – குறிப்பாகக் காவல்துறையினருக்கான ஆள்சேர்ப்பில் இது மிகவும் அவசியமானது; ஏனெனில், அமைதியைப் பராமரிக்கவும், சட்டமின்மையை எதிர்கொள்ளவும் வேண்டிய கடமை அவர்களுக்கு உள்ளது என்பதால் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கான அவர்களின் செயல்திறனே சமூகத்தின் பாதுகாப்பிற்கு ஒரு பலமான அரணாக அமைகிறது.

பணிமுறைச் சட்டம் – பொது வேலைவாய்ப்பு – ஆள்சேர்ப்பு / பணி நியமனம் – நீதித்துறை மறுஆய்வு – நோக்கம் – நீதித்துறை மறுஆய்வு அதிகாரத்தைச் செயல்படுத்தும் நீதிமன்றங்கள், ஒரு பொது அலுவலகம் அல்லது பதவிக்கு ஒரு தேர்வர் தகுதியானவரா என்பதைத் தீர்மானிப்பதில் தனது சொந்தக் கருத்தைப் புகுத்த முடியாது என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது – வேலை வழங்கும் பொதுத்துறை நிறுவனத்தின் செயல்பாட்டில் தீயநோக்கம், சான்றுகளைப் புறக்கணித்தல் அல்லது சட்டவிரோதத் தன்மை ஆகியவை இல்லாதவரை, ஒரு தேர்வர் ஏன் தகுதியற்றவர் என ஒதுக்கப்படார்

என்பது குறித்து நீதிமன்றம் மேற்கொள்ளும் தீவிர ஆய்வு, ஒரு நபரின் தகுதியைத் தீர்மானிக்கும் நிர்வாகத்தின் அதிகாரத்திற்குள் அத்துமீறி நுழைவதாகவே அமையும்.

நீதிமன்றம் மேல்முறையீடுகளை அனுமதித்து, தீர்ப்பளித்ததாவது:–

1. டெல்லி காவல்துறையில் தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட, குற்றவியல் வழக்குகளில் (விசாரணையை எதிர்கொள்பவர் அல்லது விடுவிக்கப்பட்டவர்) தொடர்புடைய தேர்வர்களின் விவகாரங்களில் முடிவெடுப்பதற்கான 'நிலை ஆணை எண் 398/2010' கொள்கை இந்த வழக்கில் தகுந்த முடிவெடுக்கப் பொருத்தமானதாகும். அந்தக் கொள்கையின் 'இணைப்பு ஏ', ஒழுங்கின்மை தொடர்பான குற்றங்களைக் குறிப்பிடுகிறது. தேர்வுக் குழுவைப் பற்றி குறிப்பிடும் அந்த நிலை ஆணையின் 'சட்டக்கூறு 3', மூத்த காவல்துறை அதிகாரிகளைக் கொண்டுள்ளது. இந்தக் குழு, (முன்பு ஒரு குற்றத்திற்காகக் குற்றம் சாட்டப்பட்டு, பின்னர் எந்தக் காரணத்தினாலாவது அந்தப் புகாரிலிருந்து விடுபட்ட) தேர்வர்களின் பணி நியமனத்திற்கானத் தகுதியை மதிப்பீடு செய்கிறது. சட்டக்கூறு 6–ன் படி, கடுமையான குற்றச்சாட்டுகள் அல்லது ஒழுங்கின்மை தொடர்பான குற்றங்களை எதிர்கொண்டு, பின்னர் 'சந்தேகத்தின் பலன்' அடிப்படையிலோ அல்லது குற்றம் சாட்டப்பட்ட நபரால் ஏற்படக்கூடிய

பழிவாங்கும் பயத்தினால் பிறழ்சாட்சியாக விடுவிக்கப்பட்ட தேர்வர்கள், பொதுவாக அரசுப் பணிக்குத் தகுதியானவர்களாகக் கருதப்பட மாட்டார்கள். இத்தகைய ஒவ்வொரு வழக்கையும் மூத்த அதிகாரிகளைக் கொண்ட தேர்வுக் குழு விரிவாக ஆய்வு செய்ய வேண்டும். பொருந்தக்கூடிய 'நிலை ஆணை' மற்றும் 'இணைப்பு–ஏ' ஆகியவற்றைப் வாசிப்பதன் மூலம், சில குறிப்பிட்ட குற்றங்களைப் பொறுத்தவரை, ஒரு வேட்பாளர் விடுவிக்கப்பட்டார் அல்லது குற்றச்சாட்டிலிருந்து விடுபட்டார் என்பது மட்டுமே அவருக்குப் பணி வழங்கப்படுவதற்கான உரிமையைத் தந்துவிடாது என்பது தெளிவாகிறது. [பத்தி12,13][11–H;14–D–G]

2. நீதித்துறை மறுஆய்வு அதிகாரத்தைச் செயல்படுத்தும் நீதிமன்றங்கள், ஒரு பொது அலுவலகம் அல்லது பதவிக்கு ஒரு தேர்வர் தகுதியானவரா என்பதைத் தீர்மானிப்பதை c பரிசீலிக்க முடியாது. வேலை வழங்கும் பொதுத்துறை நிறுவனத்தின் செயல்பாட்டில் தீயநோக்கம், சான்றுகளைப் புறக்கணித்தல் அல்லது சட்டவிரோதத் தன்மை ஆகியவை இல்லாதவரை, ஒரு தேர்வர் ஏன் தகுதியற்றவர் என ஒதுக்கப்பட்டார் என்பது குறித்து நீதிமன்றம் மேற்கொள்ளும் தீவிர ஆய்வு, ஒரு நபரின் தகுதியைத் தீர்மானிக்கும் நிர்வாகத்தின் அதிகாரத்திற்குள் அத்துமீறி நுழைவதாகவே அமையும். [பத்தி 26] [20–D–E]

3. பொதுப்பணி என்பது, மற்ற பணிகளைப் போலவே, தனது பணியில் யார் சேர வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் அரசு என்ற வேலை வழங்குபவருக்கு ஒரு குறிப்பிட்ட அளவிலான சுதந்திரம் அல்லது விருப்பத் தேர்வை வழங்குகிறது. தகுதி, அனுபவம், வயது, ஒரு தேர்வர் அனுமதிக்கப்படும் முயற்சிகளின் எண்ணிக்கை போன்ற அத்தியாவசிய அம்சங்களைச் சில விதிமுறைகள் நிர்வகிக்கின்றன. இவை பொதுப்பணியில் சேர விரும்பும் ஒவ்வொரு தேர்வாளருக்கும் தேவையான 'தகுதி நிபந்தனைகளாக' அமைகின்றன. அரசியலமைப்பின் கீழ் உள்ள 'நீதிமன்ற மறுஆய்வு', அந்த விதிமுறைகள் நியாயமானவையாகவும், பாரபட்சமற்ற முறையிலும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய அனுமதிக்கப்படுகிறது. இருப்பினும், 'தகுதி' என்பது முற்றிலும் மாறுபட்டது எனவும்; முடிவெடுக்கும் செயல்முறை சட்டவிரோதமானதாகவோ, அநீதியானதாகவோ அல்லது உள்நோக்கம் கொண்டதாகவோ இல்லாதவரை, ஒரு பொதுத்துறை நிறுவனத்தின் தன்னாட்சி அல்லது விருப்பத் தேர்வு மிக உயர்ந்ததாக இருக்கும். [பத்தி29] [22–சி–இ]

4. தேர்வர்களின் இளமை மற்றும் வயது குறித்து உயர் நீதிமன்றம் வெளிப்படுத்திய கருத்துக்கள், சிறு குற்றங்கள் அல்லது தவறான நடத்தைகளை ஒரு பொதுவான ஏற்றுக்கொள்ளத்தக்க விஷயமாகக் காட்டுவது போல் தோன்றுகிறது. தேர்வர்களின் வயது மற்றும் கிராமப்புற

சூழலைக் கருத்தில் கொண்டு, இத்தகைய தவறுகளைப் பெரிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற ஒரு பரந்த பார்வையை அந்தத் தீர்ப்பு காட்டுகிறது. இத்தகைய பொதுப்படையான கருத்துக்கள், குற்றவாளியின் நடத்தையை மன்னிப்பதற்குக் காரணமாக அமைவதோடு, அவை நீதிமன்றத் தீர்ப்புகளில் இடம்பெறக் கூடாது என்றும் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் இந்த நீதிமன்றம் கருதுகிறது. கிராமப்புறச் சூழல்களில் பெண்களுக்கு எதிரான அத்துமீறல்கள், வீட்டிற்குள் நுழைந்து தாக்குதல் நடத்துதல், காயங்களை ஏற்படுத்துதல் (ஆயுதங்களைப் பயன்படுத்தியோ அல்லது பயன்படுத்தாமலோ) போன்ற சில வகை குற்றங்கள், சாதி அல்லது படிநிலை சார்ந்த நடத்தையின் அடையாளமாகவும் இருக்கலாம். ஒவ்வொரு வழக்கையும் சம்பந்தப்பட்ட பொதுத்துறை நிறுவனம் தனது நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மூலம் நுணுக்கமாக ஆய்வு செய்ய வேண்டும் – குறிப்பாகக் காவல்துறையினருக்கான ஆள்சேர்ப்பில் இது மிகவும் அவசியமானது ஏனெனில், ஒழுங்கைப் பராமரிக்கவும், சட்டமின்மையை எதிர்கொள்ளவும் வேண்டிய கடமை அவர்களுக்கு உள்ளது என்பதால் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கான அவர்களின் திறனே சமூகத்தின் பாதுகாப்பிற்கு ஒரு பலமான அரணாக அமைகிறது. [பத்தி30] [22–F–H]

5. எதிர்மேல்முறையீட்டாளரான தேர்வர்களுக்குப் பணி நியமனம் வழங்க மறுத்த மேல்முறையீட்டாளரின் உத்தரவுகளை ரத்து செய்த

மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் பொதுவான எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பானது இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது. [பத்தி 31] [23–ஏ]

காவல்துறை ஆணையர், புது தில்லி & ஒருவர் எதிர் மெஹர் சிங், (2013) 7 SCC 685 : [2013] 13 SCR 432; அவதார் சிங் எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பலர் (2016) 8 SCC 471 : [2016] 7 SCR 445 ; ஜோகிந்தர் சிங் எதிர் யூனியன் பிரதேசம் சண்டிகர் மற்றும் பலர் (2015) 2 SCC 377 : [2014] 11 SCR 155 ; யூனியன் பிரதேசம், சண்டிகர் நிர்வாகம் மற்றும் பலர் எதிர் பிரதீப் குமார் மற்றும் ஒருவர் (2018) 1 SCC 797 : [2018] 1 SCR 112 ; அனில் பரத்வாஜ் எதிர் மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம், (2020) SCC Online (SC) 832 ; **எம்.வி**. திம்மையா எதிர் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (2008) 2 SCC 119 : [2007] 13 SCR 624 ; தல்பத் அபாசாகேப் சோலுங்கே எதிர் டாக்டர் பி.எஸ். மகாஜன், (1990) 1 SCC 305 ; யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் எதிர் எம். சத்திய பிரியா, (2018) 15 SCC 796 : [2018] 6 SCR 701 – **சார்வுறப்பட்டுள்ளது**

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்</u>

[2013] 13 SCR 432	சார்வுறப்பட்டுள்ளது	பத்தி 4
[2016] 7 SCR 445	சார்வுறப்பட்டுள்ளது	பத்தி 4
[2014] 11 SCR 155	சார்வுறப்பட்டுள்ளது	பத்தி 15
[2018] 1 SCR 112	சார்வுறப்பட்டுள்ளது	பத்தி 15
[2007] 13 SCR 624	சார்வுறப்பட்டுள்ளது	பத்தி 26
(1990) 1 SCC 305	சார்வுறப்பட்டுள்ளது	பத்தி 27
[2018] 6 SCR 701	சார்வுறப்பட்டுள்ளது	பத்தி 28

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு ; உரிமையியல் மேல்முறையீடு எண். 4960/2021.

புது டெல்லியில் உள்ள டெல்லி உயர் நீதிமன்றம், 05.12.2013 தேதியிட்ட நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண் 4308/2013-இல் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது

உடன்

உரிமையியல் மேல்முறையீட்டு எண். 4961, 4963 மற்றும் 4962 /2021

மேல்முறையீட்டாளருக்காக மாத்வி திவான், அரசு உதவி கூடுதல் தலைமை வழக்குரைஞர், பி. வி. யோகேஸ்வரன், கமலேந்திர மிஸ்ரா, சஞ்சய் குமார் விசென், பி. வி. பலராம் தாஸ் ஆகிய வழக்குரைஞர்கள் முன்னிலையானார்கள்.

எதிர்மேல்முறையீட்டாளருக்காக அனில் சிங்கால், பிரசாந்த் பரத்வாஜ், ரிஷி பரத்வாஜ், அபிசுமத் குப்தா, விக்ரம் சிங் ஜாகர், அரவிந்த் குமார் குப்தா, சுதிர் நாகர், சித்தார்த் கட்டானா, மனோகர் நாகர், யோகிந்தர் சிங் ஆகிய வழக்குரைஞர்கள் முன்னிலையானார்கள்.

நீதிமன்றத்தின் தீர்ப்பானது மாண்புமிகு நீதியரசர் திரு.**எஸ். ரவீந்திரன் பாட்** அவர்களால் பகரப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது. டெல்லி காவல்துறையின் காவலர் பதவிக்கான நியமனத்திற்குப் பரிசீலிக்குமாறு உத்தரவிட்டிருந்த எதிர்மேல்முறையீட்டாளர்கள், ('தேர்வர்கள்/விண்ணப்பதாரர்கள்' என இனி குறிப்பிடப்படுபவர்கள்) டெல்லி உயர் நீதிமன்றத்தின் ஒரு பொதுவான தீர்ப்பினால் பாதிப்படைந்த டெல்லி காவல்துறை ஆணையரால் ('மேல்முறையீட்டாளர்'), இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. டெல்லி காவல்துறையில் காவலர் பணியிடங்களை நிரப்புவதற்காக 2009–ஆம் ஆண்டு தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு விளம்பரம் வெளியிடப்பட்டது. எதிர்மேல்முறையீட்டாளர்களான தேர்வர்கள் தங்கள் விண்ணப்பங்களில், தங்களுக்கு எதிராகப் பதியப்பட்ட குற்ற வழக்குகள் மற்றும் அந்த வழக்குகளின் முடிவுகள் குறித்த விவரங்களை வெளிப்படுத்தியிருந்தனர் என்பதில் எந்தத் தகராறும் இல்லை. விண்ணப்பதாரர் தீபா தோமர் விசாரணையை எதிர்கொண்டு வந்த சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) 18396/2014 வழக்கு தவிர, மற்ற அனைத்துக் குற்ற வழக்குகளும் சமரசத்தில் முடிந்திருந்தன. அவர்களின் விண்ணப்பங்களை முறையாகப் பரிசீலித்த பிறகு, நிலையான உத்தரவு எண். 398/2010–இன் விதிகளின்படி, அவர்களின் தகுதியை மதிப்பீடு செய்வதற்காக மேல்முறையீட்டாளர் அந்த வழக்குகளை ஒரு நிலையான குழுவிடம் ஒப்படைத்தார். தீபா தோமரின் வழக்கில், அவர் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 364–இன் கீழ் கடத்தல் குற்றச்சாட்டில் குற்றவியல் விசாரணையை எதிர்கொண்டு வந்ததால், அவரது மனு மீதான பரிசீலனை ஒத்திவைக்கப்பட்டது. விண்ணப்பதாரர்களால் தனித்தனி நடைமுறைகள் மூலம் எதிர்ப்புக்குள்ளான பல்வேறு உத்தரவுகளில், மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் தேர்வர்களின் மனுக்களை அனுமதித்து, அவர்களின் வாதங்களை ஏற்றுக்கொண்டதுடன், தேர்வுக் குழுக்களின் உத்தரவுகளை ரத்து

செய்தது. மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் அனைத்து எதிர்ப்புக்குள்ளான உத்தரவுகளையும் எதிர்த்து மேல்முறையீட்டாளர் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த மனுக்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 226–வது வகுமுறைக்கூறின் கீழ் வழங்கப்பட்ட ஒரு பொதுவான தீர்ப்பின் மூலம் மேல்முறையீட்டாளரின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

3. தங்களுக்குப் பொருந்தக்கூடிய நிலையான உத்தரவுகளின் விதிகள் மற்றும் இந்த நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்புகளின் அடிப்படையில், தங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டது செல்லாது என்றும், அந்த உத்தரவுகளில் எவ்வித கருத்தையும் செலுத்தாமல் இயந்திரத்தனமாகப் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்றும் தேர்வர்கள் முக்கிய வாதத்தை முன்வைத்தனர். எதிர்ப்புக்குள்ளான உத்தரவின் மூலம், நீதியர் ஈராயம் நீதிப்பேராணை மனுக்களை அனுமதித்ததுடன், எதிர்மேல்முறையீட்டாளர்களின் விண்ணப்பங்களை நிராகரிப்பு உத்தரவுகளையும் ரத்து செய்தது.

4. மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான திருமதி. மாதவி திவான், அரசு கூடுதல் உதவி தலைமை வழக்குரைஞர் வாதிடுகையில், தேர்வுக் குழுவின் பார்வையில் ஒரு விண்ணப்பதாரரின் நடத்தை திருப்திகரமாக இல்லையெனில், அவரைத் தேர்ந்தெடுக்கும்படி

அதிகாரிகளைக் கட்டாயப்படுத்தும் வகையில் நிலையாணையை பொருள் கொள்ள முடியாது என்ற உண்மையை உயர் நீதிமன்றத்தின் நீதியர் ஈராயம் கவனிக்கத் தவறிவிட்டதால் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு பிழையானது என்று அவர் வலியுறுத்தினார். இந்த வாதத்திற்கு ஆதரவாக, 'டெல்லி காவல்துறை ஆணையர், புதுடெல்லி மற்றும் ஒருவர் எதிர் மெஹர் சிங் (2013) 7 SCC 685' மற்றும் 'அவதார் சிங் எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பலர்' (2016) 8 SCC 471 ஆகிய வழக்குகளில் இந்த நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு வழங்கிய தீர்ப்புகளை அவர் சுட்டிக்காட்டினார்.

5. இந்த நான்கு வழக்குகளிலுமே, தேர்வர்கள் குற்றவியல் நடவடிக்கைகளை எதிர்கொண்டனர் என்றும் – அவற்றில் பெரும்பாலானவற்றில், அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்ட பிறகே அந்த வழக்குகள் சமரசத்தில் முடிந்தன என்றும் மேல்முறையீட்டாளர் வலியுறுத்துகிறார். தீபா தோமரின் வழக்கில், அவர் கடத்தல் குற்றத்தைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது மட்டுமின்றி, அதற்கான குற்றச்சாட்டுகளும் பதிவு செய்யப்பட்டன. அவர் விசாரணையை எதிர்கொண்டார், ஆனால் போதிய ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் விடுவிக்கப்பட்டார். தேர்வர்கள் செய்ததாகக் கூறப்படும் குற்றங்களின் தன்மை மற்றும் அந்த வழக்குகளின் முடிவுகளைக் கருத்தில் கொண்டு, சம்பந்தப்பட்ட பதவிக்கு, அதாவது காவல்துறை

காவலர்களாகப் பணியாற்றுவதற்கு அவர்கள் தகுதியற்றவர்கள் என்று அதிகாரிகள் எடுத்த முடிவு நியாயமானது என சமர்ப்பிக்கப்பட்டது.

6. சிவ் சிங் [சிறப்பு அனுமதி மனு(உ) 13282/2014] மற்றும் பிரேம் சிங் சௌத்ரி [சிறப்பு அனுமதி மனு(உ) 18396/2014] ஆகிய இரு தேர்வர்கள் சார்பாக முன்னிலையான வழக்கறிஞர் திரு. சிங்கால் வாதிடுகையில் தேர்வுக் குழு இவர்களது வழக்குகளை மிக மேலோட்டமான முறையில் கையாண்டது என்றும், உண்மைகளை முழுமையாக ஆராயவில்லை என்றும் கூறினார். எதிர்மேல்முறையீட்டாளர் சிவ் சிங் குறித்து வாதிடுகையில், முதல் தகவல் அறிக்கையில் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 353 உள்ளிட்ட கடுமையான குற்றச்சாட்டுகள் கூறப்பட்டிருந்தாலும், உண்மையில் அவர் மீது பதிவு செய்யப்பட்ட குற்றச்சாட்டுகள் அத்தகைய கடுமையான பிரிவுகளின் கீழ் அமையவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. இறுதியில், பாதிக்கப்பட்டவர்கள் தேர்வருடன் சமரசம் செய்துகொள்வதில் எந்தத் தயக்கமும் காட்டவில்லை, இதன் விளைவாக அவர் செய்ததாகக் கூறப்படும் குற்றங்கள் சமரசமாகத் தீர்க்கப்பட்டன. அதேபோல், பிரேம் சிங் சௌத்ரி/எதிர்மேல்முறையீட்டாளர் வழக்கிலும், அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் (இ.த.ச பிரிவுகள் 143/343/341–இன் கீழ்) கடுமையானவை என்றோ அல்லது ஒழுங்கின்மை சார்ந்தவை என்றோ

கூறிவிட முடியாது என சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வழக்கிலும், குற்றம் சாட்டப்பட்ட தேர்வர் தண்டிக்கப்படவில்லை; மேலும் தகவலருடன் சமரசம் செய்து கொள்ளப்பட்டது.

7. எதிர்மேல்முறையீட்டாளர்/தேர்வர்கள் தரப்பு வழக்கறிஞர், உயர் நீதிமன்றத்தின் சில முக்கியமான கருத்துகளை ஆதாரமாக முன்வைத்து, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 323–இன் கீழ் வரும் குற்றச்சாட்டுகள், குறிப்பாக கிராமப்புறப் பின்னணியைக் கொண்ட இளைஞர்களால் செய்யப்படும் போது, அவற்றை ஒழுங்கின்மை சார்ந்தவை என்று கருத முடியாது எனவும், அத்தகைய பகுதிகளில் சிறிய சண்டைகள் மற்றும் மோதல்கள் சகஜமானவை என்ற எதார்த்த நிலையை நீதிமன்றங்கள் உணர வேண்டும் என்றும் அவர் வாதிட்டார். அத்தகைய சம்பவங்கள் நடக்கும்போது, தகவலர்கள் உண்மையை மறைத்து, எதிரிகளைச் சிக்க வைப்பதற்காகச் சம்பவத்தை மிகைப்படுத்திக் கூறும் போக்கு நிலவுவதையும் அவர் வலியுறுத்தினார்.

8. எதிர்மேல்முறையீட்டாளர் தீபா தோமர் சார்பாக முன்னிலையான வழக்கறிஞர், விசாரணை நீதிமன்றம் பதிவு செய்துள்ள முடிவுகளை இந்த நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். விசாரணை நீதிமன்றம் விவரித்துள்ள உண்மைகளை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, தேர்வருக்கும் அவரது கணவர் ஜோகிந்தருக்கும் இடையிலான உறவு கசப்பானதாக இருந்தது என்பதும்,

அதன் காரணமாகவே அவர் ஜோகிந்தரை கடத்தியதாக அவரும் அவரது குடும்பத்தினரும் குற்றம் சாட்டப்பட்டனர் என்பதும் தெரியவரும் என்று சமர்ப்பிக்கப்பட்டது. அரசுத் தரப்பு முன்வைத்த ஆதாரங்களை ஆய்வு செய்த தகுதியுள்ள நீதிமன்றம், தேர்வாளரை அந்தக் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவித்துள்ளது என்று வழக்கறிஞர் வாதிட்டார். அத்தகைய நீதிமன்றத்தின் முடிவுகளைத் தேர்வுக் குழு முறையாகப் பரிசீலித்து அதற்கு உரிய முக்கியத்துவம் அளித்திருக்க வேண்டும். ஆனால், தேர்வுக் குழு தனது கருத்தைச் செலுத்தாமல், வெறும் 'குற்றத்தின் தீவிரம்' என்ற பெயரைக் கண்டு தீபா தோமர் தகுதியற்றவர் என முடிவெடுத்தது – இது முற்றிலும் தன்னிச்சையான ஒரு முடிவாகும் என வழக்கறிஞர் சமர்ப்பித்தார்.

பகுப்பாய்வு மற்றும் முடிவுகள் ;

9. தெளிவுபடுத்தும் பொருட்டு, ஒவ்வொரு எதிர்மேல்முறையீட்டாளரின் ஈடுபாடு, பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பான விவரங்கள், வழக்கு விசாரணையின் போக்கு, அவற்றின் முடிவு போன்றவற்றைச் சுட்டிக்காட்டும் ஒரு அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :–

வரிசை	**நீதிப்பேராணை மனுதாரர்–**	**வழக்கு எண்.**	**முதல் தகவல் அறிக்கை**	**குற்றம்**	**குறிப்புகள்**

எண்.	தேர்வரின் பெயர்				
1	ராஜ் குமார்	சி.அ.ம (உ) எண். 13285/2014	14.10.2007 தேதியிட்ட மு.த.அ எண் 283/07 இ.த.ச பிரிவின் கீழ் 143,451,323,336,382	இ.த.ச பிரிவுகள் 147, 451, 323, 336 கீழ் குற்றவியல் விசாரணை	குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத தால், 22.05.2008 தேதியிட்ட உத்தரவின்படி இ.த.ச பிரிவுகள் 147 மற்றும் 336–இன் கீழ் விடுவிக்கப்பட்டார். பிரிவுகள் 451 மற்றும் 323–இன் கீழ் உள்ள குற்றச்சாட்டுகளின்படி சமரசம் செய்துகொள்ளப்பட்டது.

2	சிவ சிங்	சி.அ.ம (உ) எண். 13282/2014	18.10.2009 தேதியிட்ட மு.த.அ எண் 410/2009 இ.த.ச பிரிவின் கீழ் 323,341,325,34	323, 341, 325, 34 கீழ் குற்றவியல் விசாரணை	01.12.2019 தேதியிட்ட உத்தரவின் மூலம் விடுவிக்கப்பட்டார்; 01.12.2019 தேதியிட்ட சமரச ஆவணத்தின் அடிப்படையில் இ.த.ச பிரிவுகள் 323,341,325,34 ஆகியவற்றின் கீழ் விடுவிக்கப்பட்டார்.
3	தீபா தோமர்	சி.அ.ம (உ) எண். 18397/2014	26.05.2002 தேதியிட்ட மு.த.அ இ.த.ச பிரிவுகளின்	இ.த.ச பிரிவுகள் 364,120 B கீழ் குற்றவியல் விசாரணை	04.05,2011 தேதியிட்ட உத்தரவின் மூலம் விடுவிக்கப்பட்டார்

			கீழ் 323,341,325,34		(பக்கம்.67– 106). சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு நிரூபிக்க முடியாததால் இ.த.ச 120 பி, 364 பிரிவுகளின் கீழ் விடுவிக்கப்பட்டார். எனவே, குற்றம் சாட்டப்பட்டவருக்கு சந்தேகத்தின் பலனு க்கு உரிமை உண்டு என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

4	பிரேம் சிங் சவுத்ரி	சி.அ.ம (உ) எண். 18396/2014	14.02,2007 தேதியிட்ட மு.த.அ எண் 38/2007 இ.த.ச பிரிவுகளின் கீழ் 143, 341, 323,	இ.த.ச 323, 341,325 34 பிரிவுகளின் கீழ் விசாரணை	தகவலறிந்தவருடன் சமரசம் செய்ததன் அடிப்படையில் இ.த.ச 323,341,325,34 பிரிவுகளின் கீழ் 04.12.2009 தேதியிட்ட உத்தரவின் மூலம் விடுவிக்கப்பட்டார்.

10. இந்த வழக்கில் ஒரு பொருத்தமான முடிவை எடுப்பதற்குத் தொடர்புடைய 'நிலையாணை எண் 398/2010' பின்வருமாறு கூறுகிறது:

நிலையாணை எண். 398/2010: குற்றவியல் வழக்குகளில் தொடர்புடைய (விசாரணையை எதிர்கொள்கிற அல்லது

விடுவிக்கப்பட்ட), டெல்லி காவல்துறையில் தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வர்களின் வழக்குகளைத் தீர்மானிப்பதற்கான கொள்கை.

டெல்லி காவல்துறை ஆள்சேர்ப்பின் போது, விண்ணப்பதாரர்கள் தாங்கள் குற்றவியல் வழக்குகளில் தொடர்புடைய உண்மையை விண்ணப்பப் படிவத்திலோ அல்லது சான்றொப்பப் படிவத்திலோ மறைக்கும் பல சம்பவங்கள் கவனத்திற்கு வருகின்றன எனவும், தொடக்கத்திலேயே இதனைத் தெரிவித்தால் தங்களை ஆள்சேர்ப்புத் தேர்வுகளில் பங்கேற்க விடாமல் தடுத்துவிடுவார்கள் என்ற அச்சத்திலும், ஒருவேளை இந்தத் தகவல் வெளியே வராது என்ற நம்பிக்கையிலும் அவர்கள் இவ்வாறு செய்கிறார்கள். மேலும், ஒருவர் விடுவிக்கப்பட்டிருந்தாலும், அது சந்தோகத்தின் பலனின் விடுதலையாக' இல்லாதபட்சத்தில் அவரது பணி நியமனம் குறித்த கேள்விகள் எழுகின்றன.

ஒரு விரிவான கொள்கையை வகுக்கும் பொருட்டு, டெல்லி காவல்துறையினால் நடத்தப்படும் அனைத்து ஆள்சேர்ப்பு நடவடிக்கைகளுக்கும் பின்வரும் விதிகள் பொருந்தும்:–

1). XXX XXXXXXXXXXXX

2). XXX XXXXXXXXXXXX

3). ஒரு தேர்வர் குற்றவியல் வழக்குகள், புகார் வழக்குகள், தடுப்பு நடவடிக்கைகள் போன்றவற்றில் தனது ஈடுபாடு மற்றும்/அல்லது கைது குறித்துத் தெரிவித்திருந்து, அந்த வழக்கு விசாரணை அல்லது நீதிமன்ற விசாரணையில் நிலுவையில் இருந்தால், வழக்கின் இறுதி முடிவு வரும் வரை அவரது விண்ணப்ப நிலை நிறுத்தி வைக்கப்படும். நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகு, தேர்வர் விடுதலைதீர்ப்பில் அல்லது விடுவிக்கப்பட்டால், அவரது வழக்கு தலைமையகத்தின் தேர்வுக் குழுவிற்குப் பரிந்துரைக்கப்பட்டு, அக்குழுவில் சிறப்புப் காவல்துறை ஆணையர் (நிர்வாகம்), காவல்துறை இணை ஆணையர் (தலைமையகம்) மற்றும் காவல்துறை இணை ஆணையர் (விழிப்புணர்வு) ஆகியோர் இடம்பெற்று, அவர் டெல்லி காவல்துறை பணிக்குத் தகுதியானவரா என்பதை மதிப்பீடு செய்வார்கள்.

4). ஒரு தேர்வர் தனது குற்றவியல் வழக்குத் தொடர்பை விண்ணப்பப் படிவம் மற்றும் சான்றொப்பப் படிவம் ஆகிய இரண்டிலும் வெளிப்படுத்தியிருந்து, ஆனால் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டிருந்தால், டெல்லி காவல்துறை பணிக்கு அவரது

தகுதியை மதிப்பீடு செய்ய அவரது வழக்கு தலைமையக தேர்வுக் குழுவிற்குப் பரிந்துரைக்கப்படும்.

5). XXX XXXXXX

6). எந்தவொரு தேர்வருக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அக்குற்றச்சாட்டுகள் கடுமையான குற்றங்கள் அல்லது 'ஒழுங்கின்மை' பிரிவின் கீழ் வருகிறதோ, அவர் பின்னர் விடுவிக்கப்பட்டாலும் அல்லது சந்தேகத்தின் பலன் அடிப்படையில் விடுவிக்கப்பட்டாலும் அல்லது சாட்சிகள் மிரட்டல் காரணமாகப் பிறழ் சாட்சிகளாக மாறியிருந்தாலும், அவர் பொதுவாக அரசுப் பணிக்குத் தகுதியானவராகக் கருதப்பட மாட்டார். இருப்பினும், அத்தகைய அனைத்து வழக்குகளையும் தலைமையக தேர்வுக் குழு ஆய்வு செய்து ஒழுங்கின்மை தகுதியைத் தீர்மானிக்கும் என்றும், அவற்றை சார்ந்த குற்றவியல் வழக்குகளின் விவரங்களை இணைப்பு 'அ'–வில் காணலாம்.

7) ஒழுங்கின்மை என்ற பிரிவின் கீழ் வராத ஏதேனும் ஒரு குற்றவியல் வழக்கில் விசாரணையை எதிர்கொண்டு, பின்னர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட ஒரு தேர்வர், அதுகுறித்த தகவலை விண்ணப்பப் படிவம் மற்றும் நன்னடத்தைச் சான்றிதழ் படிவம் ஆகிய இரண்டிலும் வெளிப்படுத்தியிருந்தால், அவர் அரசுப்

பணிக்குத் தகுதியானவரா என்பதைத் தீர்மானிக்க தேர்வுக் குழு அந்த வழக்கை ஆய்வு செய்யும்.

8). XXX XXXXXXXXXXXX

9) ஒரு தேர்வர் 'குற்றவாளிகள் நன்னடத்தை சட்டம், 1958–இன்' பலன்களின் கீழ் விடுவிக்கப்பட்டிருந்தால், அது அந்தத் துறையினால் அவர் அரசுப் பணிக்குத் தகுதியற்றவர் என்பதற்கான ஒரு பாதகமான விஷயமாகக் கருதப்படாது.

11. ஒழுங்கின்மை சார்ந்த குற்றங்களைக் குறிப்பிடும் மேற்கூறிய கொள்கையின் இணைப்பு 'அ' கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

1. குற்றவியல் சதி திட்டம் தீட்டுதல் (இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 120–பி)

2. அரசுக்கு எதிரான குற்றங்கள் (இந்திய தண்டனைச் சட்டம், பிரிவுகள் 121 – 130)

3. இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை தொடர்பான குற்றங்கள் (இந்திய தண்டனைச் சட்டம், பிரிவுகள் 131–134)

4. பொது அமைதிக்கு எதிரான குற்றங்கள் (இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 153–ஏ மற்றும் 153–பி)

5. பொய் சாட்சியம் அளித்தல் மற்றும் பொது நீதிக்கு எதிரான குற்றங்கள் (இந்திய தண்டனைச் சட்டம், பிரிவுகள் 193–216 ஏ)

6. நாணயம் மற்றும் அரசு முத்திரைகள் தொடர்பான குற்றங்கள் (இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 231–263 ஏ)

7. மதம் தொடர்பான குற்றங்கள் (இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 295–297)

8. மனித உடலைப் பாதிக்கும் குற்றங்கள் (இந்திய தண்டனைச் சட்டம், பிரிவுகள் 302–304, 304 பி, 305–308, 311–317, 325–333, 335, 347, 348, 354, 363–373, 376–376–ஏ, 376–பி, 376–சி, 376–டி, 377)

9. சொத்துக்களுக்கு எதிரான குற்றங்கள் (இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 379–462)

10. ஆவணங்கள் மற்றும் சொத்துக் குறிகள் தொடர்பான குற்றங்கள் (இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 465–489)

11. திருமணம் தொடர்பான குற்றங்கள் மற்றும் வரதட்சணைத் தடுப்புச் சட்டம் (இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 498–ஏ)

12. மெஹர் சிங் வழக்கின் தீர்ப்பு, நிலை ஆணையின் சட்டக்கூறு 3–ஐச் சுட்டிக்காட்டி இதன்படி அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவில் மூத்த காவல்துறை அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர். இந்தக் குழுவானது, ஒரு குற்றத்திற்காக முன்பு குற்றம் சாட்டப்பட்டு, பின்னர் ஏதோ ஒரு காரணத்தினால் அந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட தேர்வர்களின் பணி நியமனத் தகுதியை மதிப்பீடு செய்கிறது. சட்டக்கூறு 6–இன் படி, கடுமையான குற்றச்சாட்டுகள் அல்லது ஒழுங்கின்மை சார்ந்த குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டு, பின்னர் 'சந்தேகத்தின் பலன்' அடிப்படையிலோ அல்லது குற்றம் சாட்டப்பட்ட நபரால் நேரக்கூடிய பழிவாங்கலுக்கு அஞ்சி சாட்சிகள் பிறழ் சாட்சியங்களாக மாறியதாலோ விடுவிக்கப்பட்டவர்கள் பொதுவாக அரசுப் பணிக்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவார்கள். அத்தகைய ஒவ்வொரு

வழக்கும் மூத்த அதிகாரிகளைக் கொண்ட தேர்வுக் குழுவினால் பரிசீலிக்கப்பட வேண்டும்.

13. பொருந்தக்கூடிய நிலை ஆணை மற்றும் அதன் இணைப்பு 'அ'–வை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, சில குறிப்பிட்ட குற்றங்களைப் பொறுத்தவரை, ஒரு தேர்வர் விடுவிக்கப்பட்டார் அல்லது குற்றமற்றவர் என அறிவிக்கப்பட்டார் என்பது மட்டுமே அவருக்குப் பணி வழங்கப்பட வேண்டும் என்பதற்கான உரிமையைத் தந்துவிடாது என்பது தெளிவாகிறது. இது தொடர்பாக, இணைப்பு 'அ'–வில் பட்டியலிடப்பட்டுள்ள குற்றங்களில், குறிப்பாக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 325–333; 363–373 மற்றும் 379–462 ஆகியவற்றின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சட்டக்கூறு 6–இன் கீழ் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர். இந்த நிலை ஆணையை முழுமையாக ஆய்வு செய்ததில், ஒரு குற்றவியல் வழக்கில் விடுதலைத்தீர்ப்பு அல்லது விடுவிப்பு கிடைத்தது என்பதற்காகவே, அதிகாரிகள் தங்களை கண்டிப்பாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தேர்வர்கள் வற்புறுத்த முடியாது என்பது இந்த நீதிமன்றத்தின் கருத்தாகும். இது தொடர்பாக, இந்த நீதிமன்றம் பின்வருமாறு கூறியுள்ளது:

அரசுத் தரப்பு வழக்கினை நடத்தியதில் ஏதேனும் கடுமையான குறைபாடுகள் இருப்பதாலோ அல்லது முக்கிய சாட்சிகள் பிறழ் சாட்சியங்களாக மாறியதாலோதான் ஒரு தேர்வர் விடுவிக்கப்பட்டார் என்பதைத் தேர்வுக் குழு கண்டறிந்தால், அந்த தேர்வரின் விண்ணப்பத்தை ரத்து செய்ய அக்குழுவிற்கு முழு உரிமை உண்டு. விடுதலைதீர்ப்பில் அல்லது விடுவிப்பு செய்யப்பட்ட ஒரு தேர்வர், காவல்துறைப் பணியில் அமர்த்தப்பட்டால், எதிர்காலத்தில் இன்னும் கூடுதல் பலத்துடனும் வீரியத்துடனும் அதே போன்ற குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவாரா என்பதை அனுபவம் வாய்ந்த தேர்வுக் குழுவின் அதிகாரிகளால் மட்டுமே தீர்மானிக்க முடியும்.

14. பல்வேறு குற்றச்சாட்டுகளில் எதிரியாகச் சேர்க்கப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அல்லது தேர்வர் அந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டது அல்லது நிரபராதி என அறிவிக்கப்பட்டது என்பது மட்டுமே அவரது தகுதியைத் தீர்மானிக்கும் தீர்க்கமான காரணியா என இந்த நீதிமன்றம் கடந்த காலங்களில், தற்போதைய வழக்கிற்கு முற்றிலும் இணையாக இல்லாவிட்டாலும், அதைப் போன்ற பல கேள்விகளைப் பலமுறை கையாண்டுள்ளது. கடந்த காலங்களில் வழங்கப்பட்ட பல தீர்ப்புகள், ஒருபுறம் குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் 'தெளிவான' விடுதலைக்கும், மறுபுறம் 'சந்தேகத்தின் பலன்'

அடிப்படையில் கிடைத்த விடுதலைக்கும் இடையிலான வேறுபாட்டைச் சுட்டிக்காட்டியுள்ளன. அதேபோல், ஒழுங்கின்மை சார்ந்த கடுமையான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட தேர்வர்கள் மற்றும் அவர்களின் வழக்கு முடிவுகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றத்தின் கவனத்தை ஈர்த்த மற்றொரு பகுதி, நிலுவையில் உள்ள குற்றவியல் வழக்குகள் குறித்த தகவலைத் தெரிவிக்காமல் மறைப்பதன் விளைவாகும். இந்த விவகாரங்கள் அனைத்தும் ஒரு அதிகாரப்பூர்வமான முடிவிற்காக மூன்று நீதிபதிகள் கொண்ட பேராயத்திற்கு பரிந்துரைக்கப்பட்டபோது ஒரு உச்சகட்டத்தை எட்டியது. 'அவதார் சிங்' வழக்கில், அந்த மூன்று நீதிபதிகள் அமர்வு, பொதுத் துறை அதிகாரிகள் இத்தகைய வழக்குகளைக் கையாளும் போது ஏற்படும் பல்வேறு சூழ்நிலைகளை விரிவாக விவாதித்து, தனது முடிவுகளைப் பின்வருமாறு பதிவு செய்தது:

> "38. நாங்கள் பல்வேறு முடிவுகளைக் கவனித்து, முடிந்தவரை அவற்றை விளக்கி ஒருங்கிணைக்க முயற்சி செய்துள்ளோம். மேற்கூறிய விவாதத்தின் அடிப்படையில், எங்கள் முடிவுகளை இவ்வாறு சுருக்கமாகக் கூறுகிறோம்:
>
> 38.1 தண்டனை, விடுதலை அல்லது கைது அல்லது ஒரு குற்றவியல் வழக்கு நிலுவையில் இருப்பது குறித்து ஒரு தேர்வர்

வேலை வழங்குபவருக்கு அளிக்கும் தகவல், அவர் பணியில் சேருவதற்கு முன்பாக இருந்தாலும் அல்லது சேர்ந்த பின்பாக இருந்தாலும், அது உண்மையானதாக இருக்க வேண்டும்; தேவையான தகவல்களை மறைப்பதோ அல்லது தவறான தகவல்களைக் குறிப்பிடுவதோ இருக்கக் கூடாது.

38.2 தவறான தகவல்களை அளித்ததற்காகப் பணியிலிருந்து நீக்கம் செய்யும் போதோ அல்லது விண்ணப்பத்தை ரத்து செய்யும் போதோ, அத்தகவலை அளிப்பதில் ஏதேனும் சிறப்பான சூழல்கள் இருந்தால், வேலை வழங்குபவர் அதைக் கவனத்தில் கொள்ளலாம்."

"15. இது தொடர்பாக, ஜோகிந்தர் சிங் எதிர் சண்டிகர் யூனியன் பிரதேசம் மற்றும் பலர் (2015) 2 SCC 377; சண்டிகர் நிர்வாகம் (யூனியன் பிரதேசம்) மற்றும் பலர் எதிர் பிரதீப் குமார் மற்றும் ஒருவர் (2018) 1 SCC 797 மற்றும் அனில் பரத்வாஜ் எதிர் மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம் (2020) SCC Online (SC) 832 ஆகிய வழக்குகளின் தீர்ப்புகளைப் பின்பற்றிப் பல பிந்தைய தீர்ப்புகள் வந்துள்ளன. ஒவ்வொரு மேல்முறையீட்டின் பொருண்மைகளையும் பரிசீலனை செய்வதற்கு முன்பாக, மெஹர் சிங் வழக்கில் இந்த நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் தொடர்புடைய பகுதியை மீண்டும் குறிப்பிடுவது பயனுள்ளதாக இருக்கும்:

'காவல்துறை என்பது ஒரு ஒழுக்கமான படை பிரிவாகும். சமூகத்தில் சட்ட ஒழுங்கையும் பொது அமைதியையும் பராமரிக்கும் பெரும் பொறுப்பை அது சுமக்கிறது. மக்கள் அதன் மீது மிகுந்த நம்பிக்கையும் பற்றும் வைத்துள்ளனர். அந்த நம்பிக்கைக்கு உரியதாக அது இருக்க வேண்டும். ஒரு காவல்துறைப் படையில் சேர விரும்பும் தேர்வர் மிகுந்த நேர்மையாளராக இருக்க வேண்டும். அவர் களங்கமற்ற நன்னடத்தையும் நேர்மையும் கொண்டவராக இருக்க வேண்டும். குற்றவியல் பின்னணி கொண்ட ஒருவர் இந்தப் பிரிவில் பொருந்த மாட்டார். ஒருவர் குற்றவியல் வழக்கிலிருந்து விடுதலைதீர்ப்பால் அல்லது விடுவிப்பு செய்யப்பட்டாலும், அந்த விடுதலைதீர்ப்பு அல்லது விடுவிப்பு உத்தரவானது அவர் அந்த வழக்கிலிருந்து முழுமையாகக் குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்டாரா என்பதைக் காண விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டும் ஏனெனில், அவர் மீண்டும் குற்ற வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான ஒரு சிறு சாத்தியம் கூட காவல்துறையின் ஒழுக்கத்திற்கு அச்சுறுத்தலாக அமையும். எனவே, இந்த விவகாரங்களில் முடிவெடுக்கும் பணியை 'நிலை ஆணை', தேர்வுக் குழுவிடம் ஒப்படைத்துள்ளது. தேர்வுக் குழுவின் முடிவு தீயநோக்கத்துடன் எடுக்கப்பட்டது என்று

நிரூபிக்கப்படாத வரை, அதுவே இறுதியானது. சமீப காலங்களில், காவல்துறையின் பிம்பம் சிதைந்துள்ளது. காவல்துறை அதிகாரிகள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தித் தன்னிச்சையாக நடந்துகொள்ளும் சம்பவங்கள் பொதுவெளியில் கவலையை ஏற்படுத்துகின்றன. காவல்துறையின் நற்பெயர் ஒரு பெரிய வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில், காவல்துறையின் நம்பகத்தன்மையைக் குலைக்கக்கூடிய நபர்கள் அந்தப் படைக்குள் நுழைவதைத் தடுப்பதற்காக, டெல்லி காவல்துறையால் உருவாக்கப்பட்ட 'தேர்வுக் குழு' போன்ற ஒரு அமைப்பின் முக்கியத்துவத்தையோ அல்லது அதன் வீரியத்தையோ குறைக்க நாங்கள் விரும்பவில்லை. அதே நேரத்தில், தேர்வுக் குழு தன் மீது வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையை உணர்ந்து அனைத்து தேர்வர்களையும் பாரபட்சமின்றி நடத்த வேண்டும்.

16. இப்போது ஒவ்வொரு வழக்கின் தனிப்பட்ட விவரங்களைப் பார்க்கையில் சிறப்பு அனுமதி மனு (உ) 13285/2014-இல் இருந்து உருவான உரிமையியல் மேல்முறையீட்டில் உள்ள தேர்வர் (ராஜ்குமார்), மற்ற நபர்களுடன் சேர்ந்து இ.த.ச 143/323/336/451 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றங்களைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட தேர்வர் மற்றும்

பிறர் லத்திகள் மற்றும் ஆயுதங்களுடன் புகார்தாரரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, புகார்தாரரின் சகோதரரின் மருமகளின் நகைகளைப் பறித்ததாகக் கூறப்படுகிறது. புகாரின்படி, அங்கு நடந்த மோதலில் காயங்கள் ஏற்பட்டுள்ளன. வெளிப்படையாகக் கூறின், குற்றவியல் குற்றச்சாட்டுகள் நிலுவையில் இருந்த உண்மையை தேர்வாளரே வெளிப்படுத்தியிருந்தார், இதுவே அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு வழிவகுத்தது. 22.03.2011 தேதியிட்ட தேர்வுக் குழுவின் நிராகரிப்பு உத்தரவில், வேட்பாளரின் விளக்கம் அவரது குடும்பத்திற்கும் தகவலரின் குடும்பத்திற்கும் இடையிலான ஒரு பழைய குடும்பத் தகராறு பற்றியதாக இருந்தது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, விசாரணை தொடங்கப்பட்டதையும் அந்த உத்தரவு குறிப்பிட்டது. பின்னர், விசாரணை நிலுவையில் இருந்தபோது, இரு தரப்பினரும் வழக்கைச் சமரசம் செய்து நீதிமன்றத்தின் ஒப்புதலுடன் பிரிவு 451/323–இன் கீழ் வழக்கு சமரசம் செய்யப்பட்டது மேலும், பிரிவு 147/336–இன் கீழ் உள்ள குற்றச்சாட்டுகளுக்குப் போதுமான ஆதாரங்கள் இல்லாததால், 22.05.2008 தேதியிட்ட உத்தரவின் மூலம் தேர்வர் விடுவிக்கப்பட்டார்.

17. புகார்தாரருக்கு ஏற்பட்டது ஒரு சாதாரண காயம் மட்டுமே என்ற அடிப்படையிலேயே எதிர்ப்புக்குள்ளான உத்தரவு அமைந்துள்ளது. மேலும், அந்தச் சம்பவம் நடந்தபோது ராஜ்குமாருக்கு 20 வயது மட்டுமே

ஆகியிருந்தது என்பதையும் அது சுட்டிக்காட்டியுள்ளது. இந்த பொருண்மைகளைக் கருத்தில் கொண்டு, தேர்வுக் குழு தனது பணியை ஒரு இயந்திரத்தனமான முறையில் அணுகி ராஜ்குமாரின் விண்ணப்பத்தை நிராகரித்துவிட்டதாக உயர் நீதிமன்றத்தின் நீதியர் ஈராயம் கருத்துரைத்தது.

18. இந்த நீதிமன்றத்தின் கருத்தின்படி, ராஜ்குமார் தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட காண்முடிவுகள் நிலைக்கத்தக்கவை அல்ல. தேர்வுக் குழு வழக்கு ஆவணங்களை முழுமையாக ஆய்வு செய்து, இரண்டு குற்றங்கள் நீதிமன்றத்தின் ஒப்புதலுடன் சமரசம் செய்யப்பட்டதையும், அதே நேரத்தில் மற்ற கடுமையான குற்றச்சாட்டுகளில் தேர்வர் விசாரணையை எதிர்கொண்ட போதிலும், போதிய ஆதாரங்கள் இல்லாததாலும் 'முக்கிய சாட்சிகள்' அரசுத் தரப்புப் புகாருக்கு ஆதரவாகச் சாட்சியம் அளிக்காததாலும் அவர் விடுவிக்கப்பட்டார் என்பதையும் பரிசீலித்தது. இந்த நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி, சமரசம் செய்யப்பட்ட குற்றங்கள் மற்றும் ஆதாரமின்மையால் கிடைத்த விடுதலை ஆகியவற்றுக்கு, முக்கிய சாட்சிகள் நீதிமன்றத்திற்கு வராதது அல்லது அவர்கள் பிறழ் சாட்சியங்களாக மாறியதுதான் வெளிப்படையான காரணம், இதனைத் தேர்வுக் குழு கருத்தில் கொண்டதும், அவ்வாறு கருத்தில் கொள்ள முடிந்ததும் ஒரு பொருத்தமான காரணியாகும்.

இத்தகைய சூழ்நிலைகளில், உயர் நீதிமன்றத்தின் முடிவுகளை ஆதரிக்க முடியாது.

19. மற்றொரு வழக்கில் எதிர்மேல்முறையீட்டாளரான சிவ சிங், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 323, 341, 325, 34 ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார். 12.11.2009 அன்று விசாரணை நீதிமன்றத்தில் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. எதிர்மேல்முறையீட்டாளர் ஷிவ் சிங் உட்பட குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக அந்தத் தவறுகள் நடந்ததற்கான முதற்கட்ட ஆதாரங்கள் இருப்பதாக நீதிமன்றமும் பதிவு செய்தது. இருப்பினும், பின்னர் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் புகார்தாரருக்கும் இடையே ஒரு சமரசம் ஏற்பட்டது, அதன் அடிப்படையில் 01.12.2009 அன்று விசாரணை நீதிமன்றத்தால் சமரச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தேர்வுக் குழு, குற்ற அறிக்கை மற்றும் விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவை ஆய்வு செய்தது. சம்பந்தப்பட்ட குற்றங்களின் தன்மையைக் கருத்தில் கொண்டு, சட்டத்தின் மீது பயமில்லாமல் இத்தகைய செயல்களில் ஈடுபடும் மனப்போக்கு அந்த தேர்வருக்கு இருப்பதால், அவர் பணிக்குத் தகுதியற்றவர் என்று அக்குழு கருதியது. உயர் நீதிமன்றம், தேர்வுக் குழுவின் உத்தரவை ஒரு இயந்திரத்தனமான அதிகாரப் பயன்பாடு எனக் கூறி பிழையினை குறிப்பிட்ட மேலும், பெண்ணின் கண்ணியத்திற்குப் பங்கம் விளைவிக்கும் குற்றச்சாட்டு தேர்வர் மீது இல்லை என்றும், திருட்டு

குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை. தேர்வர் இளைஞராக இருந்தார் என்றும் உயர் நீதிமன்றம் கருத்துரைத்தது.

20. இந்த நீதிமன்றம் , உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான உத்தரவை ஏற்க இயலவில்லை. இங்கே, பிரிவு 325 உட்பட பல்வேறு குற்றங்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்பதில் எந்தத் தகராறும் இல்லை. எதிர்மேல்முறையீட்டாளர் (தேர்வர்) அதன் பிறகு புகார்தாரர்களை அணுகி அந்தத் தகராறைச் சமரசம் செய்துகொண்டார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. குற்றச்சாட்டுகளுக்கு ஆதரவான ஆதாரங்கள் மற்றும் அதன் நம்பகத்தன்மை குறித்து, குறிப்பாக ஒரு குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு, அனைத்து ஆவணங்களையும் சாட்சியங்களையும் முழுமையாகப் பரிசீலிக்காமல் நீதித்துறை மறுஆய்வில் உயர் நீதிமன்றம் முடிவெடுத்தது நிலைக்கத்தக்கது அல்ல.

21. பிரேம் சிங் சவுத்ரி வழக்கில் (சிறப்பு அனுமதி மனு (உ) எண். 4304/2013) இ.த.ச 143/323/341 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றங்களைச் செய்ததாகக் கூறி அல்வார் மாவட்டக் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. பிரேம் சிங் மற்றும் நான்கு பேரின் பெயர்களைப் புகார்தாரரான முகேஷ் குறிப்பிட்டு, அவர்கள்

சட்டவிரோதமாகக் கூடியதாகவும்; லத்திகள் மற்றும் ஜேலி (ஒரு விவசாயக் கருவி) ஆகியவற்றை ஏந்தியிருந்ததாகவும், மற்றவர்களுடன் சேர்ந்து தன்னைத் தாக்கியதாகவும் குற்றம் சாட்டினார். இந்த விவகாரம் பின்னர் சமரசம் செய்யப்பட்டது; அதன் விளைவாக நீதிமன்றம் அவரை விடுவித்தது. தேர்வுக் குழு இந்த உண்மைகளைக் பரிசீலித்தது; ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த பணி நியமன உத்தரவு இதன் காரணமாகத் திரும்பப் பெறப்பட்டது. இந்த உத்தரவை மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் ரத்து செய்தது. உயர் நீதிமன்றம் தனது கருத்தில், தேர்வர் மீது பிரிவு 325–இன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்படவில்லை என்றும், அவர் 22 வயதுடைய இளைஞர் என்றும், புகார்தாரருக்குக் கடுமையான காயங்கள் ஏற்படவில்லை என்றும் குறிப்பிட்டது. ஆனால், தேர்வர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் ஒன்று பிரிவு 325 என்பதைக் கவனித்த பிறகும், 'புகார்தாரருக்குக் கடுமையான காயங்கள் ஏற்பட்டன என்பதற்கு எந்த ஆதாரமும் அல்லது சாட்சியமும் வழங்கப்படவில்லை' என்று உயர் நீதிமன்றம் கூறியது. காவல்துறையிடம் இருந்த ஆவணங்களின் அடிப்படையில் பார்க்கும்போது, புகார்தாரர் அந்தச் சம்பவத்தைப் பெரிதுபடுத்தி விவரித்துள்ளார் என்றும், அதனைத் தேர்வுக் குழு எந்தவிதமான தீவிர பரிசீலனையும் இன்றி இயந்திரத்தனமாக நிராகரித்துவிட்டது என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

22. மீண்டும், பிரேம் சிங் சவுத்ரி வழக்கில் இந்த நீதிமன்றம் கருதுவது யாதெனில், உயர் நீதிமன்றமானது தேர்வுக் குழுவின்

முடிவிற்கு எதிராக ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றம் போல அமர்ந்து ஆவணங்களை ஆய்வு செய்துள்ளது. அந்தத் தேர்வுக் குழுவானது, ஒரு தேர்வரின் தகுதியைப் பரிசீலிக்கும்போது அவரது ஒட்டுமொத்த சான்றுகளையும் ஆய்வு செய்யும் நன்மையைக் கொண்டுள்ளது. இயந்திரத்தனமாகச் செயல்பட்டார்கள் என்ற அடிப்படையிலோ அல்லது சான்றுகள் கடுமையான குற்றங்களில் ஈடுபாட்டைக் காட்டவில்லை என்ற காரணத்தினாலோ தேர்வுக் குழுவின் முடிவுகளை புறக்கணிக்கப்படக்கூடாது.

23. தற்போதைய மேல்முறையீட்டுத் தொகுப்பில் தீபா தோமர் கடைசி தேர்வர் ஆவார். அவரது கணவர் ஜிதேந்தர் சிங்கை கடத்தியதாகக் அவர் தனது தந்தையுடன் சேர்ந்து இ.த.ச 120–பி/364 ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றத்திற்காகக் குற்றம் சாட்டப்பட்டனர். விசாரணையை எதிர்கொண்ட பிறகு, 2011 மே 04 தேதியிட்ட தீர்ப்பின் மூலம் இருவரும் விடுவிக்கப்பட்டனர். இந்த விடுதலை 'சந்தேகத்தின் பலன்' அடிப்படையில் வழங்கப்பட்டது என்றும், கடத்தல் போன்ற ஒரு கொடூரமான குற்றத்தில் அவர் மீது புகார் இருப்பதாலும், பாதிக்கப்பட்ட அவரது கணவர் ஜிதேந்தர் இன்னும் கண்டுபிடிக்கப்படாததாலும், டெல்லி காவல்துறையில் பெண் காவலராகப் பணிபுரிய அவர் தகுதியற்றவர் என்றும் தேர்வுக் குழு கருதியது.

24. தேர்வுக் குழுவின் முடிவை ரத்து செய்த உயர் நீதிமன்றம், அந்தச் சம்பவம் 2001–இல் நடந்தது என்றும், ஜிதேந்தரின் தந்தை 2002–இல் தான் புகார் அளித்து தேர்வர் மற்றும் அவரது தந்தை மீது சந்தேகம் தெரிவித்தார் என்றும் காரணம் காட்டியது. உயர் நீதிமன்றம் மேலும் கருத்துரைத்ததாவது:

> 'ஜிதேந்தரின் குடும்ப உறுப்பினர்களின் சாட்சியங்களைச் சரியாக வாசித்தால், தீபாவுக்கும் ஜிதேந்தருக்கும் இடையே கசப்பான உறவு இருந்ததாகத் தெரியவில்லை; மாறாக புகுந்த வீட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளால் தீபா தனது பிறந்த வீட்டிற்குச் செல்ல வேண்டியிருந்தது மற்றும் ஜிதேந்தர் ரகசியமாகத் தீபாவைச் சந்தித்து வந்தார் அல்லது அவ்வாறு அவர் பெற்றோர் சந்தேகித்தனர். நிலைமை இப்படி இருக்கையில், தீபாவும் அவரது பெற்றோரும் ஜிதேந்தரைக் கடத்தி மறைத்து வைக்கத் திட்டமிட்டார்கள் என்பதில் எந்தத் தர்க்கமும் நியாயமும் இல்லை. வருந்தத்தக்க வகையில், தேர்வுக் குழு குற்றச்சாட்டின் பெயரைக் கண்டு முடிவெடுத்துள்ளதே தவிர, தீபாவும் அவரது தந்தையும் விடுவிக்கப்பட்டதற்கான உண்மைகளைப் பார்க்கவில்லை. மேலும், இ.த.ச பிரிவு 498–ஏ/406–இன் கீழ் தீபா அளித்த புகாரில் தனது கணவர் மீது எந்தக் குற்றச்சாட்டையும்

அவர் கூறவில்லை என்ற உண்மையை தேர்வுக் குழு கவனிக்கத் தவறிவிட்டது.

25. தீபா தோமர் வழக்கில், உயர் நீதிமன்றம் சான்றுகளை மிகத் தீவிரமாக ஆய்வு செய்து, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 226–வது வகுமுறைக்கூறின் கீழ் அனுமதிக்க முடியாத ஒன்று என தேர்வுக் குழுவின் முடிவு நிலைக்கத்தக்கது அல்ல என்று அறிவித்தது. தேர்வுக் குழுவின் உத்தரவைப் பார்க்கும்போது, அக்குழு நீதிமன்றத் தீர்ப்பையும், விசாரணை நீதிமன்றத்தில் இருந்த சான்றுகளையும் நன்கு அறிந்திருந்தது என்பது தெளிவாகிறது. முக்கியமாக, அவரது விண்ணப்பம் ரத்து செய்யப்படுவதற்கு முன்பாக, தீபாவிற்கு ஒரு காரணம் கோரும் அறிவிப்பு வழங்கப்பட்டது, அதற்கு அவரும் முறையாகப் பதிலளித்தார். அக்குழு தனது முடிவுகளை எடுக்கும்போது, அவரது பதில் மற்றும் ஒட்டுமொத்தப் பின்னணியைப் பரிசீலிக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தது. அரசியலமைப்புச் சட்டம் 226–வது வகுமுறைக்கூறின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, தீபா அந்தத் தவறில் ஈடுபட்டிருக்க வாய்ப்பில்லை என்று ஊகங்களின் அடிப்படையில் உயர் நீதிமன்றம் ஆதாரங்களை ஆய்வு செய்தது, நீதித்துறை மறுஆய்வு வரம்பை மீறிய ஒரு செயலாகும்.

26. நீதித்துறை மறுஆய்வு அதிகாரத்தைச் செயல்படுத்தும் நீதிமன்றங்கள், ஒரு பொது அலுவலகம் அல்லது பதவிக்கு ஒரு தேர்வர் தகுதியானவரா என்பதைத் தீர்மானிப்பதை மீண்டும் பரிசீலிக்க முடியாது. வேலை வழங்கும் பொதுத்துறை நிறுவனத்தின் செயல்பாட்டில் தீயநோக்கம், சான்றுகளைப் புறக்கணித்தல் அல்லது சட்டவிரோதத் தன்மை ஆகியவை இல்லாதவரை, ஒரு தேர்வர் ஏன் தகுதியற்றவர் என ஒதுக்கப்பட்டார் என்பது குறித்து நீதிமன்றம் மேற்கொள்ளும் தீவிர ஆய்வு, ஒரு நபரின் தகுதியைத் தீர்மானிக்கும் நிர்வாகத்தின் அதிகாரத்திற்குள் அத்துமீறி நுழைவதாகவே அமையும். இதனை எம்.வி. திம்மையா எதிர் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (2008) 2 SCC 119 வழக்கில் இந்த நீதிமன்றம் பின்வருமாறு வலியுறுத்தியுள்ளது:

> '21. இப்போது, தேர்வர்களைத் தேர்ந்தெடுப்பது குறித்த கேள்வி எழுகிறது. சாதாரணமாக, தீயநோக்கம் அல்லது சட்டப்பூர்வ விதிகளில் கடுமையான மீறல்கள் இருந்தாலன்றி, ஒரு தேர்வுக் குழுவின் பரிந்துரைகளைச் எதிர்ப்புக்கு உட்படுத்த முடியாது. ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றத்தைப் போலத் தேர்வுக் குழுவின் பரிந்துரைகளை நீதிமன்றங்கள் ஆய்வு செய்ய முடியாது. இந்த விருப்புறுதி அதிகாரம் தேர்வுக் குழுவிற்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்றும் தேர்வர்களின் தேர்வை ஆய்வு செய்வதற்கு நீதிமன்றங்கள் ஒருபோதும்

மேல்முறையீட்டு நீதிமன்றமாக செயல்படாது, மேலும் ஒவ்வொரு தேர்வரையும் தனித்தனியாக ஆய்வு செய்து தனது கருத்தைப் பதிவு செய்வது நீதிமன்றத்தின் பணி அல்ல..."

XXXXXXXXXXXXXXXXXXXXXXXX

30. ஒரு தீர்ப்பாயம் எவ்வாறு ஒரு மேல்முறையீட்டு அதிகார அமைப்பைப் போலச் செயல்பட்டு, தனிநபர் சான்றுகளை கோரி, இந்தத் தேர்வை நடத்துவதற்கு ஒரு தேர்வுக் குழுவை அமைக்க முடியும் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த அதிகாரம் தீர்ப்பாயத்திற்கு வழங்கப்படவில்லை, மேலும் தேர்வுக் குழுவின் மதிப்பீடானது தீர்ப்பாயத்தின் முன்போ அல்லது நீதிமன்றங்களின் முன்போ மேல்முறையீட்டிற்கு உட்பட்டது அல்ல என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். தேர்வுக் குழு மேற்கொள்ளும் மதிப்பீட்டிற்கு உரிய அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும் மேலும், அந்த மதிப்பீடானது மேல்முறையீட்டிற்கு உட்பட்டது அல்ல. தேர்வர்களின் ஒட்டுமொத்த வருடாந்திர ரகசிய அறிக்கைகளை ஆய்வு செய்யும்போது, ஒருவர் 'மிகவும் நல்லவர்' என்றும் மற்றொருவர் 'நல்லவர்' என்றும் கருதப்படலாம். இத்தகைய தலையீடுகள் அனுமதிக்கப்பட்டால், தீர்ப்பாயங்களும் உயர் நீதிமன்றங்களும்

தாங்களே ஒரு தேர்வுக் குழுவாகவோ அல்லது தேர்வுக்கு எதிரான மேல்முறையீட்டு அதிகார அமைப்பாகவோ செயல்படத் தொடங்கிவிட்டன என்றுதான் அர்த்தமாகும்."

27. தல்பத் அபாசாகேப் சோலுன்கே எதிர் டாக்டர் பி.எஸ். மகாஜன் (1990) 1 SCC 305 வழக்கில் இந்த நீதிமன்றம் பின்வருமாறு உத்தரவிட்டுள்ளது:

"12. ...தேர்வுக் குழுக்களின் முடிவுகளுக்கு எதிரான மேல்முறையீடுகளை விசாரிப்பதோ அல்லது தேர்வர்களின் ஒப்பீட்டுத் தகுதிகளை நுணுக்கமாக ஆராய்வதோ நீதிமன்றத்தின் பணி அல்ல. ஒரு தேர்வர் ஒரு குறிப்பிட்ட பதவிக்குத் தகுதியானவரா இல்லையா என்பதை, அந்த விஷயத்தில் நிபுணத்துவம் பெற்ற, முறையாக அமைக்கப்பட்ட தேர்வுக் குழுவே தீர்மானிக்க வேண்டும். நீதிமன்றத்திற்கு அத்தகைய நிபுணத்துவம் கிடையாது.... தற்போதைய வழக்கில் பல்கலைக்கழகம் உரிய சட்ட விதிகளின்படி குழுவை அமைத்துள்ளது. அந்தக் குழு நிபுணர்களைக் கொண்டிருந்தது மற்றும் அது தனக்கு முன்னால் இருந்த அனைத்து சான்றுகளையும் ஆய்வு செய்த பின்னரே தேர்வர்களைத் தேர்ந்தெடுத்தது. அவ்வாறு செய்யப்பட்ட தேர்வை ஒரு

மேல்முறையீடு போல அணுகி, நீதிமன்றம் மதிப்பீடு செய்த 'ஒப்பீட்டுத் தகுதி' என்ற அடிப்படையில் அதை ரத்து செய்ததன் மூலம், உயர் நீதிமன்றம் தவறிழைத்துள்ளது மற்றும் தனது அதிகார வரம்பை மீறியுள்ளது."

28. யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் எதிர் எம். சத்யா பிரியா (2018) 15 SCC 796 வழக்கில் இது மீண்டும் வலியுறுத்தப்பட்டது:

"தொடர்புடைய சான்றுகளின் கவனத்தில் வகைகள் எவ்வாறு மதிப்பிடப்படுகின்றன மற்றும் மதிப்பீடு செய்வதில் என்ன விதிமுறைகள் பொருந்தும் என்பது பிரத்யேகமாகத் தேர்வுக் குழுவால் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயமாகும். சட்டப்படித் தேர்வுகளை நடத்தும் அதிகாரம் தேர்வுக் குழுவிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளதாலும், தேர்வுக் குழு உறுப்பினர்கள் அந்த விஷயத்தில் நிபுணத்துவம் பெற்றுள்ளதாலும், பாரபட்சம், தீயநோக்கம் அல்லது தன்னிச்சையான போக்கு போன்ற காரணங்களால் அந்த மதிப்பீட்டு முறை சிதைக்கப்பட்டிருந்தால் ஒழிய, நீதிமன்றங்கள் பொதுவாக இத்தகைய விஷயங்களில் தலையிட முடியாது. தேர்வுக் குழுவின் முடிவுகளை மேல்முறையீடு போலக் கருதி தேர்வர்களின் தகுதியை ஆராய்வது நீதிமன்றத்தின் பணி

அல்ல. ஒரு தேர்வர் ஒரு பதவிக்குத் தகுதியானவரா இல்லையா என்பதை முறையாக அமைக்கப்பட்ட நிபுணர் குழுவான தேர்வுக் குழுவே தீர்மானிக்க வேண்டும்.

29. பொதுப்பணி என்பது, மற்ற பணிகளைப் போலவே, தனது பணியில் யார் சேர வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் அரசு என்ற வேலை வழங்குபவருக்கு ஒரு குறிப்பிட்ட அளவிலான சுதந்திரம் அல்லது விருப்பத் தேர்வை வழங்குகிறது. தகுதி, அனுபவம், வயது, ஒரு தேர்வர் அனுமதிக்கப்படும் முயற்சிகளின் எண்ணிக்கை போன்ற அத்தியாவசிய அம்சங்களைச் சில விதிமுறைகள் நிர்வகிக்கின்றன. இவை பொதுப்பணியில் சேர விரும்பும் ஒவ்வொரு தேர்வாளருக்கும் தேவையான 'தகுதி நிபந்தனைகளாக' அமைகின்றன. அரசியலமைப்பின் கீழ் உள்ள 'நீதிமன்ற மறுஆய்வு', அந்த விதிமுறைகள் நியாயமானவையாகவும், பாரபட்சமற்ற முறையிலும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய அனுமதிக்கப்படுகிறது. இருப்பினும், 'தகுதி' என்பது முற்றிலும் மாறுபட்டது எனவும்; முடிவெடுக்கும் செயல்முறை சட்டவிரோதமானதாகவோ, அநீதியானதாகவோ அல்லது உள்நோக்கம் கொண்டதாகவோ இல்லாதவரை, ஒரு பொதுத்துறை நிறுவனத்தின் தன்னாட்சி அல்லது விருப்பத் தேர்வு மிக உயர்ந்ததாக இருக்கும்.

30. தேர்வர்களின் இளமை மற்றும் வயது குறித்து உயர் நீதிமன்றம் வெளிப்படுத்திய கருத்துக்கள், சிறு குற்றங்கள் அல்லது தவறான நடத்தைகளை ஒரு பொதுவான ஏற்றுக்கொள்ளத்தக்க விஷயமாகக் காட்டுவது போல் தோன்றுகிறது. தேர்வர்களின் வயது மற்றும் கிராமப்புற சூழலைக் கருத்தில் கொண்டு, இத்தகைய தவறுகளைப் பெரிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற ஒரு பரந்த பார்வையை அந்தத் தீர்ப்பு காட்டுகிறது. இத்தகைய பொதுப்படையான கருத்துக்கள், குற்றவாளியின் நடத்தையை மன்னிப்பதற்குக் காரணமாக அமைவதோடு, அவை நீதிமன்றத் தீர்ப்புகளில் இடம்பெறக் கூடாது என்றும் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் இந்த நீதிமன்றம் கருதுகிறது. கிராமப்புறச் சூழல்களில் பெண்களுக்கு எதிரான அத்துமீறல்கள், வீட்டிற்குள் நுழைந்து தாக்குதல் நடத்துதல், காயங்களை ஏற்படுத்துதல் (ஆயுதங்களைப் பயன்படுத்தியோ அல்லது பயன்படுத்தாமலோ) போன்ற சில வகை குற்றங்கள், சாதி அல்லது படிநிலை சார்ந்த நடத்தையின் அடையாளமாகவும் இருக்கலாம். ஒவ்வொரு வழக்கையும் சம்பந்தப்பட்ட பொதுத்துறை நிறுவனம் தனது நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மூலம் நுணுக்கமாக ஆய்வு செய்ய வேண்டும் – குறிப்பாகக் காவல்துறையினருக்கான ஆள்சேர்ப்பில் இது மிகவும் அவசியமானது ஏனெனில், ஒழுங்கைப் பராமரிக்கவும், சட்டமின்மையை எதிர்கொள்ளவும் வேண்டிய கடமை அவர்களுக்கு உள்ளது என்பதால்

பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கான அவர்களின் திறனே சமூகத்தின் பாதுகாப்பிற்கு ஒரு பலமான அரணாக அமைகிறது.

31. மேற்கூறிய காரணங்களுக்காக, இந்த நீதிமன்றம், எதிர்மேல்முறையீட்டாளரான தேர்வர்களுக்குப் பணி நியமனம் வழங்க மறுத்த மேல்முறையீட்டாளரின் எதிர்ப்புக்குள்ளான உத்தரவுகளை ரத்து செய்த மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் பொதுவான தீர்ப்பை இதன் மூலம் ரத்து செய்கிறது. அதற்கேற்ப, இந்த மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன, எந்தவிதமான வழக்குச் செலவுத் தொகையும் விதிக்கப்படவில்லை.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."